# மச்சம் தரும் பலன்கள்

இறைவனின் படைப்புகளில் மிகப்பெரிய அற்புதமாக கருதப்படுவது மச்சங்கள். மனிதர்களின் குணங்களை காட்டுவது அவர்களின் உடம்பில் இருக்கும் மச்சங்கள் ஆகும். அவ்வாறு இருக்கும் மச்சங்கள் ஒரு சிலருக்கு ராஜயோகங்களை கொடுக்கும். ஒரு சிலருக்கு போராட்டமான வாழ்க்கையை கொடுக்கும்.

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது. அவற்றை எடுத்துரைக்க ஜோதிட சாஸ்திரம், எண்கலை, சாமுத்திரிகா லட்சணம், மச்ச சாஸ்திரம் என்றெல்லாம் பலவகை சாஸ்திரங்களை முன்னோர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

மச்சங்கள் கருப்புநிற மச்சங்கள், பழுப்புநிற மச்சங்கள், சிவப்புநிற மச்சங்கள் என்று சிறிய வடிவிலோ, பெரிய வடிவிலோ இருக்கும்.

நமது முன்னோர்கள் நமது உடலில் மச்சங்கள் தோன்றும் இடங்களை அடிப்படையாக வைத்து பலன்களை சொல்லி இருக்கிறார்கள். பொதுவாக சிலருக்கு திடீர் அதிர்ஷ்டம், பதவி, சொத்து சேர்க்கை, பொன் பொருள் போன்றவை அளவுக்கு அதிகமாக இருக்கும். அப்படிப்பட்டவர்களை மச்சக்காரன் என்பார்கள்.

நமது உடலில் குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் மச்சங்கள் அதிர்ஷ்டத்தை வழங்குகின்றன. அந்த மச்சங்கள் எந்த இடத்தில் இருந்தால் என்ன அதிர்ஷ்டம் கிடைக்கும்? என்பதை மச்ச சாஸ்திரம் விளக்குகிறது.

மச்சங்கள் என்பது நமது தலையில் இருந்து கால் வரை இருக்கும் தோல் பாகத்தில் சிறு மற்றும் பெரும் கரும்புள்ளிகள் ஆகும். நாம் பிறக்கும்போது இருக்கும் மச்சம் சிறியதாகவும், பெரியதாகவும் ஒரு சிலருக்கு மேலும் பெரியதாகவும் இருக்கும். இவை நாம் இறக்கும் வரை மறையாது என்பதால் அரசாங்க ஆவணங்களில் அங்க அடையாளமாக குறிப்பிடப்படுகிறது.

பிறக்கும் போதே மச்சங்கள் இருந்தாலும் ஒரு சிலருக்கு திடீரென தோன்றுவதும் உண்டு. ஆனால் அவ்வாறு தோன்றுவது வெகு அரிதாகும். இந்த மச்சங்கள் ஒரு சிலருக்கு பிறக்கும் போதே நற்பலன்களையும், யோகங்களையும் கடைசி வரை கொடுக்கும்.

ஒரு மச்சம் ஆண் மற்றும் பெண்ணுக்கு ஒரே இடத்தில் இருந்தாலும் அதன் பலன்கள் ஆண் மற்றும் பெண் இருவருக்கும் வேறுபடும். இந்த மச்சங்களை கொண்டும், அதன் இருக்கும் இடத்தை கொண்டும் அந்த நபர் எப்படிபட்டவர்? என்பதை அறிந்து கொள்ளலாம்.

மீனை போன்று இருக்கும் மச்சம் அதிர்ஷ்டத்தின் வெளிப்பாடு. உள்ளங்கையில் மச்ச ரேகை கூட உருவாகும். மச்ச ரேகை உண்டானால் மன்னனாக கூட ஆவார்கள். நெல்லிக்காய் போல, மாவடு போல எல்லாம் மச்சம் உண்டு. இப்போதெல்லாம் அது அரிதாகிவிட்டது.

## தலையில் மச்சம்

### பெண்களுக்கு தலையில் மச்சம் இருந்தால்...

பொதுவாக பெண்களுக்கு தலையில் மச்சம் இருப்பது நல்லதன்று. அத்தகைய மச்சம் கொண்டவர்களுக்கு நன்மையான பலன்களைவிட தீமையான பலன்கள் அதிகமாய் நடைபெறும்.

அவர்கள் வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டாலும் அவர்களால் கணவனுக்கும், கணவனால் அவர்களுக்கும் பிரச்சனை ஏற்படும்.

சில சமயங்களில் உறவினர்களை விட்டு பிரிய நேரிடும் வாய்ப்பு ஏற்படும்.

தலையில் வலப்பக்கத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் எந்த காரியத்தையும் தகுந்தவாறு செய்ய மாட்டார்கள். ஆனால், பெருமையாய் பேசுபவர்கள்.

தலையில் இடப்பக்கத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் அறிவும், ஆற்றலும் நிறைந்தவர்களாய் இருப்பார்கள். எதை செய்தாலும் நிதானமாய் சிந்தித்து ஒரு முடிவு எடுத்த பிறகே செய்வார்கள்.

### ஆண்களுக்கு தலையில் மச்சம் இருந்தால்...

தலையின் வலது பக்கத்தில் மச்சம் இருந்தால் அதிகாரம் செலுத்தும் இடத்தில் இருப்பார்கள்.

தலையில் இடது பக்கம் மச்சம் இருந்தால் பொது வாழ்வில் அதிக ஆர்வம் இருக்கும்.

## நெற்றியில் மச்சங்கள்

பெண்களுக்கு நெற்றியின் நடுவில் மச்சம் இருந்தால் அவர்கள் நடுத்தர குடும்பத்தில் பிறந்தாலும் செல்வந்தர் ஒருவருக்கு மனைவியாவார்கள். மேலும், ஆடம்பரமாய் வாழ்வார்கள்.

### விசாலமான நெற்றியில் மச்சம் இருந்தால்...

நெற்றி விசாலமாய் அமைந்திருந்து அதில் மச்சம் இருந்தால் அவர்கள் வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டாலும் அடிக்கடி பொருளாதார நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்.

அவர்களிடம் சாமர்த்தியமும், பொறுமையும் நிறைந்திருக்கும். எத்தகைய நெருக்கடிகளையும் எளிதாய் சமாளித்து விடுவார்கள். குடும்ப ரகசியங்களை வெளியிடாமல் பாதுகாப்பார்கள்.

### நெற்றியில் இடப்பக்கம் மச்சம் இருந்தால்...

பெண்களுக்கு நெற்றியில் இடப்பக்கம் மச்சம் இருந்தால் மன உறுதி நிறைந்தவர்கள். அதனால் எல்லா வகையான துன்பங்களையும் பொறுமையாய் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், அவர்கள் புகுந்த வீடு வசதி நிறைந்ததாய் இருக்கும். அவர்கள் பட்ட துன்பங்களுக்கெல்லாம் விடிவு காலம் பிறக்கும். வசதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வார்கள்.

நெற்றியின் இடது புறம் மச்சம் உள்ள ஆண்களுக்கு வசதியான வாழ்க்கை அமையும்.

### நெற்றியில் வலப்பக்கம் மச்சம் இருந்தால்...

பெண்களுக்கு நெற்றியில் வலப்பக்கம் மச்சம் இருந்தால் அவர்கள் கணவனுக்கு அடங்கிய மனைவியாய் நடந்து கொள்வார்கள். மிகுந்த அடக்கத்துடன் காணப்படுவார்கள். அவர்களுடைய பேச்சிலும், செயலிலும் கண்ணியம் நிறைந்திருக்கும்.

நெற்றியின் வலது புறம் மச்சம் உள்ள ஆண்களுக்கு திடீர் தனயோகம், திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும்.

பெண்களுக்கு நெற்றியின் வலது புறத்தில் சிவந்த மச்சம் இருந்தால் தன்னம்பிக்கை உடையவர்களாக இருப்பார்கள். மற்றவர்களை அடக்கி ஆளும் தன்மை கொண்டவர்கள். எதிலும் தைரியத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

ஆணின் நெற்றிப்பொட்டு இடத்தில் மச்சம் இருந்தால் வாழ்க்கை போராட்டமாக இருக்கும். எதற்கும் பயம் கொள்ள மாட்டார்கள். பல இன்னல்களை கடந்து எதிர்பார்த்த செயலை செய்து முடிப்பார்கள்.

## புருவத்தில் மச்சம்

பொதுவாக புருவத்தில் மச்சம் இருந்தால் சிறப்பான வளர்ச்சி உடையவர்களாக இருப்பார்கள்.

### பெண்களுக்கு புருவத்தின் இடப்புறத்தில் மச்சம் இருந்தால்...

பெண்களின் புருவத்தின் இடப்புறத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் துன்பத்தைவிட இன்பத்தைத்தான் அதிகமாய் அனுபவிப்பார்கள். அவர்கள் செய்யும் தவறுகளை யாராவது சுட்டிக் காட்டினால் அதற்காக அவர்கள் மீது கோபப்பட மாட்டார்கள். தங்களை திருத்திக் கொள்ள முயல்வார்கள்.

அவர்கள் சிக்கனமாய் இருப்பார்கள். தேவையில்லாத செலவுகளை தவிர்த்து அவசியமான செலவுகளை மட்டும் செய்வார்கள். சேமிப்பதில் அதிக ஆர்வமும், கவனமும் செலுத்துவார்கள். அவர்கள் நன்கு சிந்தித்து செயல்பட்டு பல காரியங்களை வெற்றிகரமாய் செய்து முடிப்பார்கள்.

அந்த வெற்றிகளை கண்டு மகிழ்ச்சியடைவார்களே தவிர ஒருபோதும் கர்வப்படமாட்டார்கள். எப்போதும் அமைதியாய் நடந்து கொள்வார்கள்.

## ஆண்களுக்கு புருவத்தின் இடப்புறத்தில் மச்சம் இருந்தால்...

ஒருவருடைய இடப்புருவத்தில் மச்சம் இருந்தால் அவர், வாழ்க்கையில் இன்பத்தைவிட துன்பத்தை அதிகமாய் அனுபவிப்பர். அவர்கள் எந்த கருத்தை சொன்னாலும் புரிந்து கொள்ள மாட்டார்கள். முட்டாள்தனமாய் பேசி மற்றவர்களுடைய கேலிக்கைக்கு ஆளாவர்.

அவருக்கு முன்கோபம் அதிகமாய் இருக்கும். கோபம் வந்துவிட்டால் என்ன பேசுவது? என்றே புரியாமல் பேசுவர். எவர் சொல்லுக்கும் கட்டுப்பட மாட்டார்கள்.

## வலப்புருவத்தின் மீது மச்சம் இருந்தால்...

### ஆண்களுக்கான பலன்கள் :

வலப்புருவத்தின்மீது மச்சம் உள்ளவர்கள் நற்குணங்களை பெற்றவர்களாய் இருப்பார்கள். தங்களுடைய விரோதிகள்கூட வளமாய் வாழ வேண்டும் என்று நினைப்பார்கள்.

அவர்கள் கடினமாய் உழைத்து சம்பாதிப்பார்கள். நேர்மையாய் நடந்து கொள்வார்கள். அவர்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தும் அளவிற்கு வருமானம் வரும்.

அவர்கள் தங்களுக்கு பிடித்தமான பெண்ணை மணந்து கொண்டு மகிழ்ச்சியாய் வாழ்வார்கள். மற்ற பெண்களை உடன் பிறந்த